29.08.2024

O.S.No.65/2018

வா.சா.1.திரு.பாரி த.பெ. தமிழ்குடிமகன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை

1. நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் எனது சித்தியான இந்த வழக்கின் வாதி கூறியதன் அடிப்படையில் தான் நான் தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நடைபெற்ற சம்பவங்கள் அனைத்தும் எனக்கு நேரிடையாக தெரியாது என்றால் சரிதான். எனது சித்தியான இந்த வாதிக்குதான் இந்த வழக்கின் சாராம்சங்கள் அனைத்தும் நன்கு தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-3 பவர் பத்திரத்தில் இந்த வழக்கு சொத்து சம்பந்தமாக எதுவும் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். இந்த சொத்து சம்பந்தபட்ட வழக்கினை நான், வாதிக்கு பதிலாக நடத்துவதற்கு வாதி, எனக்கு குறிப்பிட்டு அதிகாரம் வழங்கியுள்ளாரா என்றால் கொடுத்துள்ளார். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-3 ஆவணம் பொதுவாக வாதியின் சொத்துக்கள் தொடர்பான வழக்கினை கையாள்வதற்கு கொடுக்கப்பட்டதே தவிர, இந்த வழக்கினை குறிப்பிட்டு கையாள்வதற்கு என்று எந்த அதிகாரமும் எனக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. நான் வாதிக்கு ஆதரவாக அதிகாரம் பெற்ற முகவர் என்ற அடிப்படையில் வழக்கு நடத்துவதற்கு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து, அனுமதி பெற்றுள்ளேனா என்றால் அனுமதி பெற்றுள்ளேன். அவ்வாறு எந்த அனுமதியும் நான் வாங்கவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதனை காண்பிப்பதற்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு எந்த வருவாய் ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 ஆவணங்கள் தாவா சர்வே எண்ணில் கட்டுப்பட்டுள்ள மொத்த சொத்தான 75.05 செண்டு நிலத்திற்கு தொடர்புடைய ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தான பிளாட் எண்.4 வாதியின் அனுபவத்தில் உள்ளது என்பதனை காண்பிப்பதற்கு, நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் வீண் தாவா செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

3. நிருபண வாக்குமூலத்தில் பழைய சர்வே எண்.146/26-ல் புதிய சர்வே எண்.5/25-ல் 25 பிளாட்டுகளாக பிரித்ததாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து காலியிடமாக உள்ளது என காண்பிப்பதற்கு காலியிட வரி செலுத்தி உள்ளோமா என்றால் எனக்கு தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ-4 வரைபடத்தில் மொத்த பிளாட்டுகளாக 18B வரை காண்பித்துள்ளோம் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ-4 வரைபடம் இந்த வழககிற்காக உற்பத்தி செய்யப்பட்ட வரைபடம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-5 புகார் மனு பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார் மனுவில் என்ன கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நான் கண்ணாடி

அணிந்து வரவில்லை என்பதால் எனக்கு படிக்க முடியவில்லை. மேற்படி புகார் மனுவில் எனது தாயார் அவரது காலியிடத்தினை பார்க்க சென்ற போது அவரது இடத்திற்கு பின்பக்கம் அளந்து வேலை பார்த்து கொண்டிருப்பதாக புகாரில் உள்ளது என்றால் சரிதான். அந்த புகார் மனுவில் யார் அவ்வாறு வேலை பார்த்தார்கள் என்று எதுவும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ-5 புகார் பொய்யானது என்றாலும், அதில் உள்ள சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. எனது தந்தை பெயர் தமிழ்குடிமகன் என்றால் சரிதான். எனது தந்தை முன்னாள் அமைச்சர் என்பதால், அவரது செல்வாக்கினை பயன்படுத்தி மேற்படி பொய்யான புகார் வா.சா.ஆ-5ஐ காவல் நிலையத்தில் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

4. இந்த வழக்கின் வாதி 2017ல் தாக்கல் செய்த கேவியட் மனுவில் தாவா சொத்து காலிமனையிடமாக இருப்பதாக எதுவும் குறிப்பிடபடவில்லை என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வாதிக்கு இரண்டு மகன்கள் என்றால் சரிதான், அவர்களில் ஒருவர் தாவா சொத்திற்கு அருகில் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அவர் வீட்டில்தான் வாதி இருந்தார் என்றால் சரியல்ல, அவர் அதிலிருந்து நான்கு வீடு தள்ளி தனியாக வசித்து வருகிறார். தாவா இடத்திற்கு அருகே வசித்து வந்த வாதி தாவா சொத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்காமல் எனது தாயாரை வைத்து எனது தந்தையின் அரசியல் செல்வாக்கினை பயன்படுத்தி வா.சா.ஆ-5 பொய்யான புகாரை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடபுறம் கிழமேல் வாய்க்கால் உள்ளது என்றாலும், அதை மறைத்துவிட்டு பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ-1 மற்றும் வா.சா.ஆ-2 ஆவணங்களின் அசல் ஆவணங்கள் வாதி வசம் உள்ளது.

5. வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்தால் தாவா சர்வே எண்ணில் எத்தனை பிளாட்டுகள் யார் யாருக்கு விற்பனை செய்யப்பட்டன என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். வில்லங்க சான்றிதழ் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மை சங்கதி தெரியவரும் என்பதால்தான் நான் வில்லங்க சான்றிதழ் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிராதில் தாவா சொத்தில் பிரதிவாதி வடபுறத்தில் 10 அடி அகலம், 24 அடி நீளம் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக நான் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அதேபோல் பிராது 4ம் பக்கத்தில் இந்த பிரதிவாதி தாவா சொத்தின் வடபுறம் 3 அடி அகலமும், 24 அடி நீளமும் கிழமேல் திசையில் சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து விவரத்தில் வடபுறத்தில் 2 அடி அகலம், 24 அடி நீளம் என்பது மட்டும்தான் தாவாசொத்து என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. அதே போல் பிராது 2ம் பக்கத்தில் தாவா சொத்தில் 3 அடி அகலம், 24 அடி நீளம் வடபுறத்தில் ஆக்கிரமித்துள்ளதாக தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது நிருபண வாக்குமூலத்தில் 10அடி அகலம் 24 அடி நீளம் ஆக்கிரமிப்பு செய்து கட்டுமானம் கட்டி வருவதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேலும் எனது நிருபண வாக்குமூலம் 3ம் பக்கத்தில் கிழமேல் 35 அடியும் தென்வடல் 3 அடியும் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டியுள்ளதாக கூறியுள்ளேன் என்றால்

சரிதான். எனவே எவ்வளவு விஸ்தீரணத்தில் ஆக்கிரமிப்பு உள்ளது என்பதனை எங்களால் குறிப்பிட்டு சொல்ல இயலாது என்றால் சரியல்ல. என்ன வகையான ஆக்கிரமிப்பு உள்ளது என்றால் இரண்டு மாடி கட்டிடம் கட்டிவிட்டார்கள். தாவாசொத்து கட்டுமானம் எதுவும் இல்லாமல் தற்போது வரை காலியிடமாக தான் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்து இரண்டு மாடி கட்டிடம் கட்டியுள்ளார் என்று எனது பிராதிலோ, நிருபண வாக்குமூலத்திலோ நான் சொல்லவில்லை என்றால் எனக்கு தெரியாது.

7. தாவாசொத்தில் மேற்புறத்தில் இருந்து 35 அடி நீளத்திற்கு பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்துள்ளார். மீத இடம் காலியாக உள்ளது. தாவா சொத்திற்கு வடபுறத்தில் பிரதிவாதி சொத்து உள்ளது என்றால் சரிதான், தாவா சொத்திற்கு வடபுறத்தில் பிரதிவாதிக்கு 22 அடி நீளம் மட்டும்தான் பாத்தியம் உள்ளது என்றாலும், நான் கூறுவதுபோல் 35 அடி நீளத்திற்கு தாவா சொத்தில் அவர் ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. தாவா சொத்திற்கான புலவரைடம் தாக்கல் செய்திருந்தால் தாவா சொத்தின் அமைவிடம் குறிப்பாக தெரிய வரும் என்றாலும், அதை தாக்கல் செய்யாமல், இந்த வழக்கினை நான் தாக்கல் செய்து வீண் வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. இந்த பிரதிவாதி, இந்த வாதிக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.129/2018 என்ற வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் இந்த வாதிக்கு நான் அதிகாரம் பெற்ற முகவராக இருந்து எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. நான் அவ்வாறு எதிர்வழக்குரை செய்துள்ளேன் என்றாலும, தற்போது அந்த எதிர்வழக்குரையில் உள்ள சங்கதிகளை ஒப்புக்கொள்ள வேண்டி வரும் என்பதன் காரணமாக தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல.

8. அந்த எதிர்வழக்குரையில் இந்த வழக்கின் பிரதிவாதி, இந்த வழக்கின் வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 3 அடி அகலமும் 24 அடி நீளமும் கிழமேல் திசையில் ஆக்கிரமித்துள்ளதாக நான் கூறியுள்ளேன் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி இந்த வழக்கிலும் சரி, அசல் வழக்கு எண்.129/2018லிலும் சரி அவரது சொத்தின் தெற்கு மாலில் 22 அடி நீளம் மட்டும்தான் கிழமேலாக அவருக்கு பாத்தியம் என்று குறிப்பிட்டு கட்சி செய்துள்ளார், அதை இந்த வழக்கிலும் சரி, அசல் வழக்கு எண்.129/20187லிலும் சரி எங்கள் தரப்பில் குறிப்பிட்டு மறுப்பு தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் தாவா சொத்தை புல வரைடத்தின் அடிப்படையில் அளவீடு செய்யப்பட்டதாக சொல்லி உள்ளார் என்றால் சரிதான், ஆனால் அதற்கான புல வரைபடம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியவில்லை. எனது பிராதில் கூறப்பட்டுள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லப்படும் பகுதியின் அளவு ஒவ்வொரு பக்கத்திலும் மாறுபட்டு காணப்படுவதால் அதை திருத்துவதற்கு நாங்கள் என்ன நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

9. இந்த வழக்கின் பிரதிவாதிக்கு தாவா சொத்தின் வடபுறம் கிழமேலாக 22 அடி மட்டும்தான் பாத்தியம் என்றாலும், அவருக்கு 35 அடி பாத்தியம் இல்லை என்றாலும், மேற்படி 22 அடி நீளம் போக மீதமுள்ள விஸ்தீரணத்தினை கிழமேலாக யார் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்றும் என்ன வகையில்

ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள் என்று எனது வழக்கில் சொல்லவும் இல்லை, அவரை இந்த வழக்கில் சட்சி சேர்க்கவும் இல்லை என்றால் சரியல்ல. தாவாசொத்தில் பிரதிவாதி ஆக்கிரமிப்பு எதுவும் செய்யவில்லை என்பதால்தான் அதற்கான அளவுகளை என்னால் குறிப்பிட்டு சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தான பிளாட் எண்.4 எங்கள் வசம் இல்லை என்பதால் தான் அதற்கான வருவாய் ஆவணங்கள் எதையும் எங்களால் தாக்கல் செய்ய முடியவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ-5புகார் மனு தாவா சொத்தின் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதற்கான புகார் மனு அல்ல என்றாலும், எனது தாயார் வெற்றிசெல்வி சொத்தில் உள்ள பிரச்சினை சம்பந்தமாக அவர் வேறு யார் மீதோ கொடுத்த புகார் மனு என்றாலும் சரியல்ல.

10. தாவா சொத்து சம்பந்தமாக எந்த வழக்கு மூலமும் எழவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக கற்பனையாக வழக்கு மூலங்களை சுட்டிகாட்டி இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல. தாவா சர்வே எண்ணில் போடப்பட்ட லேஅவுட் அனுமதி பெறப்பட்டதா என்றால் இல்லை. ஆகையால் இந்த வழக்கிற்காக நாங்களே ஒரு வரைபடத்தினை உருவாக்கி, அதன் அடிப்படையில் தாவா சொத்து பிளாட் எண்.4 எனவும் அது காலியிடமாக உள்ளது எனவும், இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் எனது முதல்வரான இந்த வாதிக்கு எந்த உரிமையும் சித்திக்கவில்லை என்றாலும், பொய் சங்கதிகளை கொண்டு, இந்த தாவாவினை தாக்கல் செய்து, நாங்கள் வீண் தாவா செய்து வருகிறோம் என்றாலும் சரியல்ல, தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.